**மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைக் குழு அமைப்பது குறித்து இன்று (19.2.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:-**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்கு முறைக் குழு அமைக்க வேண்டுமென்ற தனது கருத்தை இங்கே பதிய வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதி ஆணை வெளியிட்டப்பின், 6 ஆண்டுகளுக்குப் பின்னால், அந்த ஆணை அரசிதழில் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றம் வரை சென்று மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அரசாணை பெற்றுத் தந்தார்கள் என்பது காவேரி நடுவர் மன்றத்தினுடைய வரலாறு.

19–2–2013 அன்று மத்திய அரசிதழில் இறுதி ஆணை பதிப்பிக்கப்பட்டபின் நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின் பரிந்துரைப்படி, காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்கு முறைக்குழுவை உடனடியாக அமைக்கும்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமருக்கு 22–2–2013 மற்றும் 11–03–2013 அன்று கடிதம் எழுதினார்கள்.

மத்திய அரசு காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்கு முறைக் குழுவை அமைக்காததால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவற்றை உடனடியாக அமைக்கும்படி ஓர் இடைக்கால மனு 18–3–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு, 10–5–2013 அன்று விசாரணைக்கு வந்தது.

அப்பொழுது, 19–02–2013 நாளிட்ட மத்திய அரசிதழ் அறிவிப்பின்மீது தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற மத்திய அரசு வழக்கறிஞரின் கூற்றை பதிவு செய்து, நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்த ஒரு தற்காலிய ஏற்பாடாக, மத்திய நீர்வளத் துறைச் செயலரின் தலைமையில் மாநில தலைமைச் செயலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க உச்ச நீதிமன்றம் 10–05–2013 அன்று ஆணையிட்டது.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறை குழுவை உடனே அமைக்க மத்திய நீர்வள துறைக்கு ஆணை வழங்கும்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமருக்கு மீண்டும் 17–05–2013 அன்று கடிதம் எழுதினார்கள். இதைத்தொடர்ந்து 02–09–2013 மற்றும் 03–09–2013 இல் கடிதங்கள் எழுதப்பட்டன.

உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி மத்திய அரசு **22–05–2013** அன்று ஒரு இடைக்கால ஏற்பாடாக காவேரி மேற்பார்வைக் குழுவை அமைத்து மத்திய அரசிதழில் அறிக்கை வெளியிட்டது. இக்குழுவின் கூட்டங்கள் இதுவரையில் 4 முறை நடைபெற்றுள்ளன. இக்கூட்டங்களில் நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்த இக்குழு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று கருதியதால், ஒரு நிரந்தர ஏற்பாடாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க உத்தரவு வழங்க வேண்டி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை **11–11–2013** அன்று தாக்கல் செய்தது. இம்மனுவை மேல்முறையீட்டு மனுக்களுடன் சேர்த்து விசாரிக்கலாம் என உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இது கடந்த காலத்தினுடைய வரலாறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள் இங்கே சட்டமன்றத்தில் ஒரு தனித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று **05–12–2014** அன்று நம்முடைய பின்வரும் அரசினர் தனித் தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதனை நான் இங்கே நினைவுகூர்ந்து அந்தத் தீர்மானத்தின்படி "காவேரி நடுவர் மன்றத்தின் **05–02–2007** ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெரும் முயற்சியால் **19–02–2013** அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே, காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர வாரியாக பெறுவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும்."

இதன் தொடர்ச்சியாக **12–12–2014** அன்று பாரத பிரதமருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் தமிழக சட்டமன்றத்தின் தீர்மானத்தை அனுப்பி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து தமிழகத் தலைமைச் செயலர் மற்றும் மத்திய நீர்வளத் துறைச் செயலருக்கு இவ்விரு அமைப்புகளையும் உடனடியாக அமைக்கக் கோரி **10–02–2015** அன்று கடிதம் எழுதியுள்ளார்கள்.

இவ்வழக்கை உச்ச நீதிமன்றத்தில் விரைவில் எடுத்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள்பற்றி தமிழ்நாட்டின் மூத்த வழக்கறிஞர்கள் ஆய்வு செய்த வருகின்றார்கள் என்பதனைத் தெரிவித்து தொடர் நிகழ்வாக இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதனை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

* * * * * *